### சோஃபா மாடல் அரசின் அராஜகப் போக்கு!

# முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கைது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஜூலை 4-**

**முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



முன்னாள் அமைச்சர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களை காவல்துறை கைது செய்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழ்நாடெங்கும் சீர்கெட்டு போயிருக்கும் சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்கக் காட்டாத வேகத்தை, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரை கைது செய்வதில் காட்டியிருக்கிறது #SofaModel அரசு.

அவதூறு பேசி பொய் பழிகளை அள்ளி வீசுவது மட்டும் தான் அரசியல் என்று செயல்படும் ஆளுங்கட்சியின் இந்த அராஜகப் போக்கை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொய் வழக்காலும் கைது நடவடிக்கைகளாலும் கழகத்தை முடக்கலாம் என்று நினைக்கும் இந்த Reels அரசின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.


### கரூர் சம்பவத்தில் ஆதவ் அர்ஜூனாதான் முக்கியக் குற்றவாளி!

# ஆதவ் அர்ஜூனாவிற்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 4-**

**கரூர் சம்பவத்தில் ஆதவ் அர்ஜூனா தான் முக்கியக் குற்றவாளி. ஆதவ் அர்ஜூனாவிற்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்படும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.**



கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

கரூர் சம்பவத்தில் ஆதவ் அர்ஜூனா தான் மெயின் அக்யூஸ்ட். ஆதவ் அர்ஜூனாவிற்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்படும்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த இரண்டு முன்னாள் அமைச்சர்களை ஆளும் கட்சி யில் இணைக்கும் விழாவில் பொறுப்பற்ற முறையில் பேசியது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு மக்களுக்கு ஆத்திரம் ஏற்படக்கூடிய வகையில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேசி இருக்கிறார். கரூரில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி அவர் பொய்யும், புரட்டுமாக பேசி உள்ளார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினராக அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்றவர் ஆளும் கட்சியிலே சேர்ந்து விட்ட காரணத்தினால் கரூர் தொகுதிக்கு இடைத்தேர்தல் வர உள்ளது. அந்த தொகுதி மக்களுடைய கவனத்தை திசை திருப்புகிற நோக்கத்தில் நேற்று அவ்வாறு பேசியிருக்கிறார்.

**எங்கள் தலைவர் மக்களோடு துணை நின்றார்!**

கரூர் சம்பவத்தின் போது எங்கள் தலைவர் தளபதி எடுத்த நடவடிக்கையை மனசாட்சி உள்ளவர்கள், அரசியல் தெரிந்தவர்கள், நாகரீகம் அறிந்தவர்கள் என அத்தனை பேருமே பாராட்டினார்கள். விஜயைப் போல 41 பேர் இறந்த போது முகத்தை மூடிக்கொண்டு ஓடி போய் ஒளிந்து கொள்ளவில்லை.

எங்கள் தலைவர் அன்று மக்களோடு துணை நின்றார். உயிர்களைக் காப்பாற்ற என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எல்லாம் உடனடியாக எடுத்து மக்களின் உயிரைக் காப்பாற்றிய ஒரே தலைவர் எங்கள் தலைவர் தளபதி என்பதை அந்த பகுதி மக்களும் மறக்க மாட்டார்கள் தமிழ்நாடும் மறந்திருக்காது.

கரூர் வழக்கை விசாரிப்பதற்கு SIT அமைத்து அதன் தலைவராக யாரை அன்று நாங்கள் நியமித்தோமோ அதே காவல்துறை அதிகாரியை தான் இன்று மிக முக்கிய பொறுப்பான உளவுத்துறை ஐஜி ஆக நியமித்து உள்ளனர். ஆக நடுநிலையோடு தான் கடந்த தி.மு.க. அரசு நடந்து கொண்டது என்பதற்கு இதுவே சாட்சி. நாங்கள் அமைத்த SIT குழுவின் விசாரணை ஒழுங்காக நடைபெற்றது. ஆனால் இவர்களே சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று கேட்டார்கள். சி.பி.ஐ. விசாரணையும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**மெயின் அக்யூஸ்ட் ஆதவ் அர்ஜூனா!**

இந்த விவகாரத்தில் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளவர் நேற்றைக்கு பேசிய ஆதவ் அர்ஜூனா. அவர் தான் மெயின் அக்யூஸ்ட். அக்யூஸ்ட் லிஸ்ட்டில் இருக்கும் ஆதவ் அர்ஜூனா நேற்றைக்கு சட்டம் தெரியாமல் நீதி மன்ற நடவடிக்கை புரிந்து கொள்ளாமல் பேசிக் கொண்டு உள்ளார். உச்சநீதி மன்றம் உத்தரவுப்படி வழக்கை ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அந்த விசாரணைக்கு விஜய் இரண்டு முறை போய்விட்டு வந்தார். புஸ்ஸி ஆனந்த், நிர்மல் குமார், முதல்வரின் தனி செயலாளராக தற்போது நியமிக்கப்பட்டுள்ள ஜெகதீஷ், ஆதவ் அர்ஜூனா என இவர்கள் எல்லாம் A1, A2, A3. . என அக்யூஸ்ட் லிஸ்ட்டில் உள்ளனர்.

**வழக்கு தாக்கல் செய்யவுள்ளோம்!**

உச்சநீதிமன்றத்தின் மேற்பார்வையில் சி.பி.ஐ. விசாரிக்கிற போது வழக்கை பற்றி ஒரு அக்யூஸ்ட், வழக்கின் விசாரணையைக் கெடுக்கிற வகையில் நேற்றைய தினம் பேசி இருக்கிறார்.

ஆகவே இது குறித்து சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் உச்சநீதி மன்றத்திலே வழக்கு தாக்கல் செய்ய உள்ளோம். அதேபோல அமைச்சர் ஆதவ் அர்ஜூனா மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடர உள்ளோம்.

**ஆதவ் அர்ஜூனா மனைவியும் அக்யூஸ்ட்!**

இந்த ஆதவ் அர்ஜூனாவுடைய ஆட்டத்துக்கு ஒரு எல்லையே இல்லாமல் போய் கொண்டுள்ளது. அவர் யார் என்பது இந்த நாட்டுக்கு தெரியும். இந்த நாட்டையே திவாலாக்கும் லாட்டரி குடும்பத்தை சார்ந்தவர். இவருடைய குடும்பத்தை சார்ந்தவர்கள் மீது கேரளாவில் ரூபாய் 928 கோடிக்கு லாட்டரி சீட்டு ஊழல் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. இவருடைய மனைவி அந்த வழக்கில் ஒரு அக்யூஸ்ட் . இவர் இந்த வழக்கில் ஒரு அக்யூஸ்ட். இப்படிப்பட்ட அக்யூஸ்டுள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து கொண்டு எங்களை குற்றம் சொல்வதை எந்த காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்களுக்கு உரிய வகையிலே சட்டரீதியாக நாங்கள் பதில் சொல்வோம் நடவடிக்கை எடுப்போம்.

**இது சர்வாதிகாரத்தின் உச்சம்!**

முன்னாள் அமைச்சர் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதா கிருஷ்ணன் அவர்கள் அவரது தொகுதியிலே ஆய்வுக்கு போகிற போது கைது செய்திருக்கிறார்கள் என்றால் இது சர்வாதிகாரத்தின் உச்சம் இதை நிச்சயமாக சட்டரீதியாக நாங்கள் சந்திப்போம்.

**முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்,எல்,ஏ, கைது! காட்டுமிராண்டித்தனமான செயல்!**

இந்த அராஜகத்தை எல்லாம் மிக விரைவில் நாங்கள் முடிவுக்கு கொண்டு வருவோம். இந்த ஆட்சி எத்தனை நாளுக்கு என்பதை பொதுமக்கள்தான் முடிவு செய்ய வேண்டும். எந்தவிதமான ஆக்கப்பூர்வமான பணியும் இந்த ஆட்சியில் நடக்கவில்லை. தினமும் கொலைகள், பாலியல் வன்கொடுமைகள் நடந்து கொண்டிருக்கிறது. எல்லா விதமான தவறுகளும் நடந்து கொண்டி ருக்கிறது. ஆனால் அதையெல்லாம் கவனிப்ப தற்கு இன்றைக்கு இருக்கிற ஆட்சியாளர்களுக்கு நேரமில்லை.

'தி.மு.க. என்பது வெட்ட வெட்ட துளிர்க்கிற மரம் அரைக்க அரைக்க மணக்கிற சந்தனம். தீட்டத் தீட்ட ஒளிர்கிற வைரம்' என்பதை இன்றைக்கு புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிறவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

### 108-ஐ 120–ஆக மாற்ற குதிரைபேர அரசியல் நடத்தும் த.வெ.க.!

# ஒன்றிய அரசு விசாரணை நடத்த வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி வலியுறுத்தல்!

**புதுக்கோட்டை, ஜூலை 4-**

**108-ஐ 120 ஆக மாற்ற குதிரைபேரம் நடத்தும் த.வெ.க. குறித்து ஒன்றிய அரசு விசாரணை நடத்த வேண்டும்" என்று முன்னாள் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**



இது குறித்து முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களின் பேட்டி வருமாறு:-

முதல்வர் விஜய் கரூர் செல்வதற்கு முன்பாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்ய வேண்டும் என்ற திட்டத்தோடு பொய் வழக்கு போட்டுள்ளனர்.

**குதிரை பேரத்துக்கு எதிரானது தி.மு.க.!**

குதிரைபேரத்திற்கு எடுத்துக்காட்டு த.வெ.க. 108 என்பதை 120 ஆக்க வேண்டும் என்பது தான் அவர்கள் இலக்கு அதற்காக குதிரை பேர அரசியலிலே ஈடுபட்டு வருகிறார்கள்.

"வாஷிங் பவுடர் நிர்மா"ன்னு ஒரு பாட்டு வரும். அதுபோல ஊழல்கரை உள்ளவங்களுக்கு எல்லாம் வாஷிங் பவுடர் விஜய்.

குதிரைபேர அரசியலில் ஈடுபட்டு ஆட்சிக்கு வர வேண்டும் என்றால் 2017லேயே நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்க முடியும். ஆனால் அதை எங்கள் தலைவர் விரும்பவில்லை. மக்களை சந்தித்து தான் ஆட்சிக்கு வந்தோம். எனவே குதிரை பேரத்திற்கு எதிரானது தான் தி.மு.க.

**வைகோவின் ஒப்புதல் வாக்குமூலம்!**

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பலரும் த.வெ.க.விற்கு தாவி வருகின்றனர். குதிரை பேரத்திற்கு எடுத்துக்காட்டே த.வெ.க. தான். ம.தி.மு.க.வின் பொதுக்குழுக் கூட்டத்தில் இரண்டு எம்.எல்.ஏ. களையும் ராஜினாமா செய்ய சொல்லுங்கள் நானே அவர்களை வெற்றி பெற வைக்கிறேன் என முதல்வர் விஜய் உறுதியளித்தாக வைகோவே ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். த.வெ.க. தரப்பில் இருந்து குதிரை பேரம், யானை பேரம் என எல்லாம் நடந்துள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஆனால் அந்த குதிரை பேரத்தின் மீது தமிழ்நாடு காவல்துறை, லஞ்ச ஒழிப்பு துறை எந்த ஒரு வழக்கும் பதியவில்லை.

ஆனால் யாரோ ஒரு சட்டமன்ற உறுப்பினர் திடீரென்று ஒரு புகார் கொடுக்கிறார் அதன் மீது முழு விசாரணை மேற்கொள்ளாமலேயே நடவடிக்கை தொடங்குகிறது. அந்த புகார் அளித்த எம்.எல்.ஏ.வின் பின்புலம் என்ன தெரியுமா.? அவர் ஊத்தங்கரை தொகுதியில் சீட் வாங்கவே முறைகேடு செய்ததாக அந்த கட்சியினரே குற்றம் சாட்டுகின்றனர். அதுதான் அவரது தகுதி.

இப்போது அவர் சொல்கிறாராம், திருநாவுக்கரசு என்பவர் அவரை தொடர்பு. 'உங்களோட தனியா பேசணும் வாங்கன்னு கூறினாராம் இவர் எதற்கு என கேட்டாராம். சபாநாயகர் மேல நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர போறோம். அதற்கு ஆதரவா வாக்களிக்கணும் என்று திருநாவுக்கரசு சொன்னாராம். இப்படி ஒரு கதையை புனைந்து புகாராக கொடுத்துள்ளார். அதன் பேரில் திருநாவுக்கரசை கைது செய்து அவரிடம் இருந்து வாக்குமூலம் பெற்றதாக கூறி இன்றைக்கு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நெருக்கமான கார்த்தி உள்ளிட்டவர்கள் மீது அவர்கள் ஏவி விட்ட அம்பு பாய்ந்து கொண்டுள்ளது.

**செந்தில் பாலாஜியை கைது செய்ய துடிக்கிறார்கள்!**

இப்படி அவசரவசரமாக ஒரு புகாரை பெற்று அவர்களுக்கு விருப்பப்பட்ட வாக்குமூலத்தை பெற்று தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்றால் அதற்கு காரணம் முதல்வர் விஜய் கரூருக்கு போவதற்கு முன்னால் செந்தில் பாலாஜியை கைது செய்துவிட்டு செல்ல வேண்டும் என்கின்ற நோக்கமாக இருக்கலாம் என்றுதான் இன்றைக்கு நினைக்கத் தோன்றுகிறது.

எனவே குதிரை பேரம் இங்கே நடந்ததற்கு எந்த ஆதாரமும், அடையாளமுமே கிடையாது காவல்துறை அங்கே வழக்கு பதிவு செய்ததே முதலில் தவறு. அதுவும் ஒரு புகார் அடிப்படையிலே விசாரணை கூட செய்யாமல் அவர்கள் வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள்.

குதிரைபேரத்தின் மீது தான் த.வெ.க. அரசே நிற்கிறது. த.வெ.க. ஆட்சிக்கு வந்தவுடன் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் நான்கு பேர் ராஜினாமா பண்றாங்க. அடுத்த நிமிஷம் சட்டமன்றத்திலேயே த.வெ.க.வில் இணைகிறார்கள். எனவே அவர்கள் நோக்கம் எல்லாம் 108 என்பதை 120 ஆக்க வேண்டும் என்பது தான். அந்த இலக்கோடு அவர்கள் குதிரைபேர அரசியலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது இன்றைக்கு வெளிப்படையாக தெரியும். எனவே ஒன்றிய அரசு இதற்கு உரிய விசாரணையை நடத்த வேண்டும்.

**வாஷிங் பவுடர் எல்லாம் விஜய்!**

முன்பு எல்லாம் வாஷிங் பவுடர் நிர்மான்னு ஒரு பாட்டு வரும். அதுல அந்த பவுடர போட்ட உடனே கரை போயிடும்னு சொல்லுவாங்க. அது போல ஒரு ஊழல்கரை உள்ளவங்களுக்கு எல்லாம் வாஷிங் பவுடர் விஜய். இப்போது த.வெ.க.வில் இணைந்துள்ள விஜயபாஸ்கர் மேல நாலு கேஸ் நிலுவையில இருக்கு, அந்த எம்.ஆர். விஜய பாஸ்கருக்கு மூணு கேஸ் நிலுவையில இருக்கு. வேலுமணி போன்றவர்கள் அடுத்தடுத்து போக இருப்பதா சொல்றாங்க அவங்க மேலயும் கேஸ் நிலுவையில் இருக்கிறது.

இதை எல்லாம் வெறும் பவுடர் போட்டு துவைக்க முடியாது. அதனால மெஷின்ல போட்டுதான் துவைக்கணும். அந்த மெஷினுக்கு பேரும் விஜய்ன்னு தான் வச்சிருக்காங்க. விஜய் வாஷிங் மெஷினில் வாஷிங் பவுடர் விஜயை போட்டு துவைத்தால், யார் யார் மீதெல்லாம் ஊழல் குற்ற வழக்குகள் இருக்கிறதோ அவர்கள் எல்லாம் புனிதர்களாக, தூய சக்திகளாக மாறி விடுவார்கள் சொல்ல முடியாது அவங்களுக்கு கோயில் கட்டி கூட கும்பிட்டாலும் கும்பிட்டுருவாங்க எனவே அப்படிப்பட்ட நிலைமைதான் இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிறது.

நாங்கள் பொறுப்பான எதிர்கட்சியாக இருக்கிறோம் எங்களுடைய தலைவர் குதிரைபேர அரசியலில் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தால் 2017-லேயே செய்திருக்க முடியும். அன்றைக்கு எங்களிடத்திலே 109 எம்.எல்.ஏ.க்கள் இருந்தார்கள். ஆனால் குதிரை பேரம் கூடாது நான் கொள்ளைப்புறம் வழியாக வர விரும்பவில்லை. மக்களை சந்தித்துத்தான் நான் ஆட்சிக்கு வருவேன் என்று சொன்ன தலைவர் எங்களுடைய தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள். எனவே கொள்ளைப்புற அரசியல், குதிரைபேரம் என்பது எல்லாம் எங்களுக்கு பிடிக்காது. குதிரைபேர அரசியலில் ஈடுபட்டு ஆட்சிக்கு வர வேண்டும் என்று நினைத்திருந்தால் அன்றைக்கே வந்திருக்க முடியும். எனவே குதிரை பேரத்துக்கு எதிரானது தான் திராவிட முன்னேற்ற கழகம் ஜனநாயகத்தை தான் நாங்கள் நம்புகிறோமே தவிர பணநாயகத்தை நம்பவில்லை.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியில் கூறியுள்ளார்.

# பேராசிரியர் சு.கிருஷ்ணசாமி இல்ல மணவிழா!

## கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

*கோவை, ஜுலை 4 -*

*தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற முன்னாள் உறுப்பினர் செயலர் பேராசிரியர் முனைவர் சு. கிருஷ்ணசாமி - தமிழ்நாடு சுகாதாரத்துறை இளநிலை நிர்வாக அதிகாரி (ஓய்வு) க. புவனேஸ்வரி ஆகியோரின் புதல்வர் கே. பரத் சூர்யா - கே.மனோசித்ரா ஆகி யோரின் திருமணம் 2.7.2026 வியாழக்கிழமை அன்று காலை 7.30 மணியளவில் கோயம்புத்தூர் தெலுங்கு பாளையம் ஸ்ரீ வாசவி மிரா மகாலில் நடைபெற்றது.*

**மணவிழா வரவேற்பு!**

*மணவிழா வரவேற்பு இன்று (4.7.2026 - சனிக்கிழமை) மாலை 6.30 மணியளவில் மதுரவாயல் எஸ்.பி.பி. கார்டன்ஸில் நடைபெறுகிறது.*

*இம்மணவிழா வரவேற்பு கழகப் பொருளாளர் - முன்னாள் ஒன்றிய அமைச்சர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் நடைபெறுகிறது.*

*இம்மணவிழா வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கலைஞானி கமல்ஹாசன் எம்.பி. கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*இம்மணவிழா வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி என்.சிவா, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., டாக்டர் எச்.வி.ஹண்டே, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், மா.சுப்ர மணியன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., ஆவடி சாமு. நாசர், டி.ஆர்.பி. ராஜா, முனைவர் கோவி. செழியன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன், என்.ஆர். இளங்கோ, தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி., நல்லகுப்புசாமி, நீதிபதி (ஓய்வு) டி.முருகேசன், மாதவரம் எஸ்.சுதர்சனம், காரம்பாக்கம் க.கணபதி, நொளம்பூர் ராஜன், டீக்கா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.*



கோவை வடக்கு மாவட்டம், கோவை புதூர் பகுதி, வார்டு எண் 91 சுகுணாபுரம் மேற்கு, கல்கி கார்டனில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொது விநியோக கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி திறந்து வைத்தார். இதில் பகுதிக் கழகச் செயலாளர்கள் முரளி, சிவசக்தி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.